4th May 1962]

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : முயற்சி எடுப்பதற்கு இப்பொழுதுதான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குள்ளாக, திட்டமாக எதுவும் சொல்வதற்கில்லை.

SRI K. A. MATHIALAGAN : அண்மையில் உதகையில் கூட இருக்கிற தென் மண்டல கவுன்சிலில் இது சம்பந்தமாக, அண்டை இராச்சியங்களான ஆந்திரம், கேரளம் ஆகியவைகளை வற்புறுத்து வதற்கு நம்முடைய பிரதிநிதிகள் ஏதாவது திட்டம் கொண்டு போகிறார்களா ? இல்லாவிட்டால் திட்டம் ஏதாவது தயார் செய்வார்களா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : தலைவர் அவர்களே, திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆந்திரா விலிருந்தும், மற்ற அரசாங்கத்திலிருந்தும் பதில் எதிர்பார்க்கப் படுகிறது.

SRI SAW. GANESAN : காவிரித் தண்ணீரை இங்கு கொண்டு வருவதற்கு முயற்சி செய்யப்பட்டதே, அது பலனுடையதாக இருக்கிறதா ? அப்படியானால் இந்த முறை சௌகரியமாகக் கைக்கொள்ளப்பெறுமா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : காவிரி ஜலம் கொண்டு வருவதற்கான திட்டம் இன்னும் பரிசிலனையில் இருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : காவிரியில் இருந்து தண்ணீர் கொண்டு வருவது அதிகச் செலவுள்ளதாகவும், கடின மானதாகவும் இருக்கும். அதைவிட மலிவான செலவில், சுலபமாக நெல்லூர் திட்டத்திலிருந்து தண்ணீர் கொண்டுவர முடியும் என்று நிபுணர்கள் கூறுகிற காரணத்தினால் ஆந்திர அரசாங்கமும், நம்முடைய அரசாங்கமும் சேர்ந்து சோமசிலா திட்டத்தை சீக்கிரமாகக் கொண்டுவருவதற்கு மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்துவார்களா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : நெல்லூர் திட்டம் மூன்றாவது திட்டத்தில் இல்லாத காரணத்தினால் அப்படி சீக்கிரம் அது வருமென்று சொல்வதற்கில்லை.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*— **An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

III.—INFORMATION REGARDING QUESTIONS.

SRI K. A. MATHIALAGAN : Sir, on a point of order. Under **Rule 22 of the Assembly Rules, the first hour of every sitting** shall, unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions.

முதல் ஒரு மணி நேரம் கேள்விகளுக்காக ஒதுக்கப் பட்டிருந்தும் 20 நிமிடங்களில் கேள்விகள் முடிவடைந்து

[Sri K. A. Mathialagan] [4th May 1962

விடுகின்றன. சட்டசபையின் விதியின்படி அங்கத்தினர்கள் கொடுக்கின்ற கேள்விக்கு 14 நாட்களுக்குள் இலாக்காவிலிருந்து பதில்கள் வரவேண்டும் என்று இருக்கிறது. அப்படி நிலைமை இருந்தும், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் 200-க்கும் மேற்பட்ட கேள்விகளைக் கொடுத்திருந்தும் அவற்றுக்குப் பதில் வராமல் இருப்பதற்குக் காரணம் என்ன? இலாகாக்களில் இருந்து பதில்கள் வராத காரணத்தினால் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று கேள்விகள் தான் பட்டியலில் சேர்க்கப்பட்டு வருகின்றன. ஆகவே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு உடனடியாகப் பதில் அனுப்பும்படியாகச் சொல்லி, அதிக கேள்விகளை பட்டியலில் சேர்க்கப்படுவதோடு கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு மணி நேரத்தை அதற்காகவே ஒதுக்க சபாநாயகர் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : There is no point of order in this. Number of questions have been received late and they were sent to the Departments. When answers are ready they will be included in the list of questions and one hour or even more will be allotted for answering questions on the floor of the House.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் கூறுவது இன்னும் அதிகமாக உப கேள்விகள் கேட்பதற்கு அனுமதிக்கவேண்டுமென்று தான்.

Sri K. A. MATHIALAGAN : 200-க்கும் மேற்பட்ட கேள்விகளை அனுப்பியிருந்தும் அவைகளுக்கு இலாகாக்களில் இருந்து பதில்கள் வராத காரணத்தினால் கேள்விப்பட்டியலில் அவைகளைச் சேர்க்க முடியாது போவதனால் அரசாங்கத்தை கேள்விகளுக்கு சீக்கிரம் பதில் அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்ள வேண்டும் என்பதுதான் என் யோசனை.

IV.—ANNOUNCEMENTS.

(1) MESSAGE FROM THE GOVERNOR.

Mr. SPEAKER : I have to announce to the House that I have received the following message from the Governor :—

"I have received with great satisfaction your resolution of thanks for the address with which I opened the present session of the Legislature."

(2) NOMINATION OF COUNCIL MEMBERS TO THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

Mr. SPEAKER : I have to announce that the following three members of the Council have been nominated to associate with the Committee on Subordinate Legislation for the financial year 1962–63 :—

Sri K. Balasubramania Iyer.
Sri M. Seshachariar.
Sri A. Gajapathy Nayagar